**அனுப்புநர்**

முனைவர்.சி..உஷாராணி,M.Sc., B.Ed., Ph.D.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்

**ந.க.எண். 060952 / எப்1 / 2019** **நாள் : 17.07.2019**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத்தேர்வு, ஜுன் 2019 – தேர்வு முடிவினை மதிப்பெண் பட்டியல்களாகவே பதிவிறக்கம் செய்துக் கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

நடைபெற்ற ஜுன் **2019** மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத்தேர்வு, முடிவினை மதிப்பெண் பட்டியல்களாகவே (Statement of Marks) பதிவிறக்கம் செய்துக் கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பினை மாணாக்கர்/தேர்வர் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது செய்திக்குறிப்பு மட்டும். விளம்பரம் அல்ல.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

## அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–600 006

## மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத்தேர்வு ஜுன் 2019

## தேர்வு முடிவுகளை மதிப்பெண் பட்டியல்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்த செய்திக்குறிப்பு

நடைபெற்ற ஜுன் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் (தட்கல் தனித்தேர்வுர்கள் உட்பட) தங்களது தேர்வு முடிவினை, 18.07.2019 (வியாழக்கிழமை) பிற்பகல் 2:00 மணி முதல் இணையதளத்திலிருந்து தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து, மதிப்பெண் பட்டியல்களாகவே ஆன்லைனில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

தனித்தேர்வர்கள் வருகிற **18.07.2019** பிற்பகல் 2:00 மணி முதல் தங்களது மதிப்பெண் பட்டியல்களை **www.dge.tn.nic.in** என்ற இணையதள முகவரிக்குசென்று **"Statement of Marks HSE First Year Result – June 2019"** என தோன்றும் வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்ததேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து, தங்களது மதிப்பெண் பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

ஜுன் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு **19.07.2019 (வெள்ளிக் கிழமை) மற்றும் 22.07.2019 (திங்கட்கிழமை)** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

தேர்வர்கள் தங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவையா அல்லது மதிப்பெண் மறுகூட்டல் செய்ய வேண்டுமா என்பதை முன்னரே தெளிவாக முடிவு செய்து கொண்டு அதன் பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விடைத்தாளின் நகல் பெற்றவர்கள் மட்டுமே விடைத்தாள் மறுமதிப்பீடு கோரி பின்னர் விண்ணப்பிக்க இயலும்.

விடைத்தாளின் நகல் கோரி விண்ணப்பிப்போர், அதே பாடத்திற்கு மதிப்பெண் மறுகூட்டலுக்குத் தற்போது விண்ணப்பிக்கக் கூடாது. விடைத்தாளின் நகல் பெற்ற பிறகு அவர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

**<u>விடைத்தாளின் நகல் (Scan copy of the answer script) பெறுவதற்கான கட்டணம்:</u>**

| | | |
|---|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.275/– |

**<u>மறுகூட்டலுக்கான (Retotalling) கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| உயிரியல் பாடத்திற்கு மட்டும் | – | ரூ.305/– |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |

**<u>விடைத்தாள் நகல் – இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளுதல் :</u>**

அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவிக்கும் நாட்களில், தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்துக் கொள்ள வேண்டும்.

ஒம்/–
**இயக்குநர்**

**<u>இடம் :</u>** சென்னை–600 006.
**<u>நாள் :</u>** 17 .07.2019